1973 ஆகஸ்ட் 7]

சென்னை நகரைச் சுற்றி வட்டப் பாதை.

*59 வினு—திரு. என். கிட்டப்பா :

திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரைச் சுற்றி வட்டப்பாதை ஒன்று அமைத்திடும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. என். டென்னிஸ் : இந்த வட்டப் பாதை அமைப்பதால் அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவு ஏற்படும்? டூரிஸ்ட் போக்குவரத்திற்கு இந்தப் பாதை பெரிதும் உபயோகமாக இருப்பதால் விரைவிலே அமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்த வேலை அநேகமாக அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

The estimated cost is Rs. 3.2 crores and Rs. one crore respectively.

வியாசர்பாடிப் பகுதியில் செல்லும் தேசீய நெடுஞ்சாலை

*60 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வியாசர்பாடிப் பகுதியில் ஜி.என்.டி. நெடுஞ்சாலை மிகவும் குறுகலாக உள்ளதால் போக்குவரத்துக்கு இடையூருக உள்ளதா ?

(இ) ஆம் எனில், இப்பகுதி எப்போது அகலப்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இவ்வேலைக்காக 1973–74-ம் ஆண்டில் இரண்டு லட்ச ரூபாய் செலவு செய்ய அரசு அனுமதி வழங்கி இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த வியாசார்பாடி பகுதியில் மாற்றுப் பாதை அமைக்க நிலத்தைக் கையகப் படுத்துவதில் அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. அதை விரைவுபடுத்தி, போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1973–74-ம் ஆண்டில் வேலை நடைபெறுவதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலையிலே ஏற்படுகிற காலதாமதம் தவிர்க்கப்படும். வேலை விரைவிலே முடிவடைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கரிசல்குளம் கிராம பாசனக் குளம்

*** 61 வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கரிசல்குளம் கிராமத்தில் தற்போது தூர்ந்து போயுள்ள பாசனக் குளத்தைப் புதுப்பிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், வேலை எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) திட்டம் பரிசீலிக்கப்பட்டு, தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : இந்த இடத்தில் ஏற்கெனவே ஜமீன் காலத்திலே ஒரு பாசனக் கண்மாய் இருந்தது. பின்னர் அது தூர்ந்துபோய்விட்டது. இப்போது குறைந்த செலவிலேனும் அந்தக் கண்மாயைப் புதுபித்து, அந்தப் பகுதியிலுள்ள மானுவாரி நிலத்தை நஞ்சையாக்கினால் உற்பத்தி பெருகி, உணவுப் பற்றுக்குறை தீர வழி ஏற்படும். ஆகவே, மீண்டும் இந்தத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திட்டத்தினால் பயனடையும் நிலம் 36 ஏக்கர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்காகும் செலவு 53,000 ரூபாய் என்றும் கணக்கிடப் பட்டிருக்கிறது. செய்கின்ற செலவுக்கு ஏற்ற வகையில் வருவாய் கிடைக்குமா என்று பார்த்ததில், ஒரு டன் உற்பத்திக்கு